விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 008 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 12 செவ்வாய்க்கிழமை (27.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ஆயிரம் போதை மாத்திரைகள், 18 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன்

### ● யாழில் இருவர் கைது
### ● கைதானவர்களுக்கு மரண தண்டனை?

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணத்தில் 18 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஆயிரம் போதை மாத்திரைகளுடன் இருவர் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் ஆறுகால்மடம் மற்றும் கொக்குவிலை 11

## கண்ணீரால் நனைந்த சுனாமி நினைவாலயங்கள்



## அமெரிக்கா பறந்தார் கோட்டாபய ராஜபக்ஷ



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் நால்வர் நேற்றுக் காலை அமெரிக்காபயணமானதாகவிமான நிலைய தகவல்கள் தெரி 11

## விபத்தில் படுகாயமடைந்த மாணவி உயிரிழப்பு

### முல்லையில் சோகம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த மாணவி உயிரிழந்த சம்பவம் சோகத்தினை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 23ஆம் திகதி முறிப்பில் இருந்து மாஞ்சோலை செல்வதற்காக வாகனத்தில் சென்றபோது, மாணவர்கள் இறங்க வேண்டிய இடம் வந்தும் சாரதி வாகனத்தை நிறுத்தாது 11

### தீர்வு தொடர்பில் பேச


## கொழும்பில் ஒன்றுகூடவுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள்

(யாழ்ப்பாணம்)

**இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுக்களை முன்னெடுப்பது குறித்து ஆராய எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில் தமிழ்க் கட்சிகள் கொழும்பில் ஒன்றுகூடவுள்ளன.**

அதன்படி எதிர்வரும் ஜனவரி 7 மற்றும் 8ஆம் திகதிகளில் கொழும்பில் இந்தச் சந்திப்பு நடைபெறும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

கடந்த கலந்துரையாடல் அவசர அவசரமாக 11



## இனப் பிரச்சினைக்கான தீர்வு தமிழர்களுக்கு சாதகமாக அமையும்

### விக்னேஸ்வரன் எம்.பி நம்பிக்கை



(யாழ்ப்பாணம்)

இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ் மக்களுக்கு சாதகமான சூழல் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர், தீர்வு விடயத்தில் பெரும்பான்மையின கட்சிகள் எதிர்ப்பினை வெளியிட 11

### சோதனை எனும் பெயரில்

## மக்களை வதைக்கும் கடற்படையினர்!

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை சந்தியில் உள்ள சோதனைச் சாவடியில் கடமையில் இருக்கும் கடற்படையினர், சோதனை என்ற பெயரில் வீதியில் செல்பவர்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி வருகின்றனர்.

இந்தச் செயல் தொடர்ச்சியாக இவ்வாறு நடைபெறுவதாக அசௌகரியங்களுக்கு உள் 11

### இவ்வருட இறுதியுடன்

## 30 ஆயிரம் அரச ஊழியர்களுக்கு ஓய்வு

(கொழும்பு)

இந்த வருடத்தின் இறுதியில் சுமார் 30,000 அரச ஊழியர்கள் ஓய்வு பெறவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் மற்றும் இந்த வருடத்தில் 60 வயது பூர்த்தியாகிய அரச ஊழியர்களே இவ் 11

## முல்லைத்தீவில் படகு கவிழ்ந்து மீனவர் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கொக்கிளாய், முகத்துவாரம் பகுதியில் நேற்றுக் காலை படகு விபத்திற்குள்ளாகி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நீர்கொழும்பு பிற 11

## மோ.சைக்கிள் சில்லுக்குள் புடைவை சிக்கி விபத்து

### பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பப் பெண்ணொருவர் விபத்துக்குள்ளாகி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணும் அவரது மகளும் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தவேளை அவரது புடைவை மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் சிக்குண்டு விபத்து 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



## திருமதி விமலாதேவி இராசேந்திரம்

(Diploma in Music, Diploma in Edu, SLTS - I)

**ஆசிரியர் சேவை விபரம்**

முதல் நியமனம் - 29.12.1985
கிளி/ பரந்தன் இந்து மகா வித்தியாலயம்
29.12.1985 - 30.07.1991
யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
01.08.1991 - 30.04.2010
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
01.05.2010 - 26.12.2022

ஆசிரியப் பணியில் உயர்வுற்று ஓய்வுபெறும் தங்கள் ஓய்வுக் காலம் சிறந்தோங்கி நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:-* **ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.**

(C-5669)

# உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார் 'சுனாமி பேபி'



"சுனாமி பேபி" என்றழைக்கப்படும் அபிலாஷ் நேற்று தமது இல்லத்தில் ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

அவரது வீட்டில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியில் அவர் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

ஆழிப்பேரலை ஏற்பட்ட போது காணாமல் போன குழந்தை ஒன்று கல்முனை ஆதார வைத்தியசாலையில் கண்டு பிடிக்கப்பட்டது.

இந்தநிலையில் குறித்த குழந்தைக்கு, 9 தாய்மார்கள் உரிமை கோரியிருந்தனர்.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட மரபணு பரிசோதனையில் குறித்த குழந்தை ஜெயராசா தம்பதியினரின் குழந்தையான அபிலாஷ் என உறுதிப்படுத்தப்பட்டது.

இந்தநிலையில், அவர் அனைவராலும் "சுனாமி பேபி" என அழைக்கப்பட்டு வருகிறார். (4,7)

# மரக்கறி எண்ணெய் ஏற்றிச் சென்ற லொறி விபத்து

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் மரக்கறி எண்ணெய் ஏற்றிச் சென்ற லொறி ஒன்று கஹதுட்டுவ பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொட்டாவையில் இருந்து பாணந்துறைக்கு மரக்கறி எண்ணெய் மற்றும் சில பொருட்களை ஏற்றிச் சென்ற போது, லொறியின் பின் இடது ரயர் வெடித்ததில் லொறி கட்டுப்பாட்டை இழந்து வீதியில் குடைசாய்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, குறித்த லொறியில் இருந்த மரக்கறி எண்ணெய் பீப்பாய்கள் வெடித்து சிதறியதால், அதிவேக நெடுஞ்சாலையின் ஒருபக்க ஒழுங்கையில் எண்ணெய் கசிந்துள்ளது.

இதனால் காலி நோக்கிச் செல்லும் வீதியின் ஒரு ஒழுங்கை முற்றாக மூடப்பட்டது. (4,7)

# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்பிக்கும் இரசாயனவியல் ஆசிரியர் திருமதி **விக்னேஸ்வரன் மனோகரி** அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் சிற்றம்பலம் சுந்தரலிங்கம்

அவர்கள் 25.12.2022 நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-5668)

**யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகம்**

ஓம் விராட் விஸ்வ பிம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## சோமசுந்தரம் சரஸ்வதி

காரைநகரைப் பிறப்பிடமாகவும் காளி கோவிலடி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சரஸ்வதி அவர்கள் கடந்த (23.12.2022) வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் வரதராஜன், தசரதகுமார்(பிரான்ஸ்), தனலட்சுமி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயராணி, இராஜேஸ்வரன்(லண்டன்), ஜெயாழினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.12.2022) செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(13912)

காளி கோவிலடி,
சங்கானை.

தொடர்புகளுக்கு:
வரதன் - 075 647 7626
குட்டி - 0033605765340
ராசன் - 00447903884633

தகவல்:
குடும்பத்தினர்

# கண்ணீரில் கரைந்த ஆறு ஆண்டுகள்

அன்னை மடியில்
08 • 05 • 1992



இறைவன் அடியில்
27 • 12 • 2016

## அமரர் செல்வி ஹம்சுஜா கணேசலிங்கம்

மூவிரண்டு ஆண்டுகள் ஓடினவே
மண்ணுயர்ந்து விண்பறந்து
அன்பு மகளே! நீ சென்று
கண்ணிமையில் உனை வைத்து
காத்துநின்றோம் கண்மணியாய்
கண்ணயர்ந்து போனதுவேன்
கண்மணியே சொல்லிடம்மா?
விண்ணுறங்கும் உன் ஆத்மா சாந்திபெற
விண்ணவன் தன் பாதங்களை
பற்றுகின்றோம் பாவியர் நாம்!

(C-5667)

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலை அழிவின் நினைவேந்தல் நிகழ்வுகள்


யாழ்.பல்கலையில்



யாழ். மாவட்ட செயலகத்தில்


மனற்காட்டில்


கட்டைக்காட்டில்


வடமராட்சி உடுத்துறையில்


கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில்


வவுனியாவில்


மன்னாரில்


முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்தில்

**சுனாமி அனர்த்தம் இடம்பெற்ற 18 ஆம் ஆண்டு நினைவு தினமான நேற்று தேசிய பாதுகாப்பு தினம் நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.**

**(படங்கள்- சிவசாந்தன், கஜிந்தன்,மகாலிங்கம்,ஜோசப்நயன்,சதீஸ்,தேவானந்தன்)**

# அரசியல் தீர்வு விவகாரம் பற்றி தமிழ் தலைமைகளுடன் விரைவில் பேச்சு

## –பேராசிரியர் திஸ்ஸ–

(கொழும்பு)

அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பில் தமிழ் அரசியல் தலைமைகளுடன் எதிர்வரும் நாட்களில் பேச்சுவார்த்தையில். ஈடுபடவுள்ளோம். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவின் ஆட்சியில் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் சாத்தியமற்றதை போன்று, ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் ஆட்சியில் அரசியல் தீர்வு சாத்தியமற்றது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார்.

அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் தீர்வு காண்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி தலைமையில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற சர்வ கட்சி தலைவர் கூட்டத்தில் கலந்து கொண்டேன்.

பாராளுமன்றம் மற்றும் பொது இடங்களில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு குறித்து கருத்துரைக்கும் தமிழ் அரசியல் தலைமைகள் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தொடர்பில் கருத்துரைக்கவில்லை.

ஐக்கிய நாட்டுக்குள் பிளவுபடாத வகையில் அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதேஎமதுநிலைப்பாடாகஉள்ளது.

75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளமை வேடிக்கையாகவுள்ளது. இவரது செயற்பாடுகள் எதிர்காலங்களில் இல்லாத பிரச்சினைகளை தோற்றுவிக்கும் வகையில் உள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பல ஆண்டு காலமாக சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் வசமுள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறோம். அதற்கு ஆதரவு வழங்குவோம் என அவர் தெரிவித்தார். (நி)

# காற்றின் தரம் மீண்டும் ஆரோக்கியமற்ற நிலையில்

## தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பு மற்றும் பல பகுதிகளில் காற்றின் தரம் மீண்டும் ஆரோக்கியமற்ற நிலையை எட்டியுள்ளது.

இந்த நிலையில் அடுத்த சில நாட்களில் காற்று மாசு சற்று அதிகரிக்கும் என தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு எச்சரித்துள்ளது. வளிமண்டலத்தில் தூசி துகள்கள் அதிகரிப்பதால் காற்றின் தரம் பாதுகாப்பற்ற நிலைக்குச் செல்லும்.

இதனால் வரும் நாட்களில் நாட்டில் மூடுபனி போன்ற நிலை தோன்றும். இலங்கையின் காற்று மாசுபாட்டிற்கான முக்கிய காரணங்களில் ஒன்று இந்தியாவில் இருந்து வீசும் பலத்த காற்றினால் தூசி துகள்களின் வருகையாகும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு தெரிவித்துள்ளது. தரவுகளின்படி 150 முதல் 200 வரை காற்றின் தரத்தை கொண்ட பகுதிகள் ஆரோக்கிய மற்றவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் காற்றின் தரம் மோசமடைந்தால், சுவாசம், நுரையீரல் அல்லது இதய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். காற்றின் தரம் ஆரோக்கிய மற்ற அல்லது சிவப்பு வரம்பில் (151 - 200) இருந்தால், உடல் நலம் பாதிக்கப்பட்டவர்கள், வெளிப்புற வேலை அல்லது செயற்பாடுகளைத் தவிர்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அதேநேரம் ஆரோக்கியமாக இருக்கும் அனைவரும் வெளியில் செலவிடும் நேரத்தை குறைக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளனர். (நி)

# இறக்குமதி தடையை நீக்க நிதி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள் தவிர 670 இற்கும் மேற்பட்ட பொருட்களுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதி தடையை நீக்க நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அந்நியச் செலாவணி பிரச்சினை மற்றும் பொருளாதார நெருக்கடியை அடுத்து 1465 பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்திருந்தது.

இந்நிலையில் 670 இற்கும் மேற்பட்ட பொருட்களுக்கான தடையை நீக்குவது குறித்து பரிசீலித்து வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார். (நி)

# எரிபொருள் விலை மேலும் குறைவடையலாம்

(கொழும்பு)

உள்நாட்டில் எரிபொருள் விலை அடுத்த சில மாதங்களில் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை அடுத்து கச்சா எண்ணெய் விலை கணிசமாக அதிகரித்தது.

இருப்பினும் தற்போது சர்வதேச சந்தையில் விலை குறைந்துள்ள நிலையில், அடுத்த சில மாதங்களில் விலை மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை நாட்டில் எரிபொருளுக்கான நாளாந்த தேவை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்தும் கியூ.ஆர் குறியீட்டு முறை மற்றும் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி என்பன தேவை குறைவதற்கு காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல் ஏலத்தில் அதிக தொகைக்கு ஏலம்போன- சாம்கரன், கேமரூன், பென்ஸ்டோக்




16ஆவது ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிக்கான வீரர்களின் மினி ஏலம் கேரள மாநிலம் கொச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதில், இங்கிலாந்தின் இளம் வீரர் சாம் கரனை வாங்க சென்னை சுப்பர் கிங்ஸ், பஞ்சாப் கிங்ஸ் அணிகளுக்கு இடையே கடும் போட்டி நடைபெற்றது. இறுதியாக, சாம் கரனை பஞ்சாப் கிங்ஸ் அணி ரூ.18.25 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது.

இதேபோல் அவுஸ்திரேலிய வீரர் கேமரூன் கிரீனை வாங்கவும் கடும்போட்டி இருந்தது.

இறுதியில் அவரை ரூ.17.50 கோடிக்கு மும்பை இந்தியன்ஸ் அணி ஏலத்தில் எடுத்தது.

சாம் கரன் மற்றும் கேமரூன் கிரீன் இருவரும் இதுவரை நடந்த ஐ.பி.எல் ஏலத்திலேயே அதிக தொகைக்கு ஏலம் போன வீரர்கள் என்ற சாதனையை படைத்துள்ளனர்.

அதேபோல் மற்றொரு இங்கிலாந்து வீரர் பென்ஸ் டோக்ஸை சென்னை அணி ரூ.16.25 கோடிக்கு ஏலத்தில் எடுத்துள்ளது. (6)

# ஆஸியின் டெஸ் கிரிக்கெட் விருது ஷேன்வோர்னுக்கு



அவுஸ்திரேலியாவின் வருடத்தின் மிகச் சிறந்த ஆண் டெஸ்ட் வீரருக்கான விருது ஷேன் வோர்னின் பெயரில் வழங்கப்படும் என கிரிக்கெட் அவுஸ்திரேலிய நிறுவனம் நேற்று திங்கட்கிழமை தெரிவித்துள்ளது.

அனைத்து வகையான கிரிக்கெட்டிலும் சிறந்த வீரருக்கான விருது அலன் போர்டரின் பெயரில் வழங்கப்படும். அதற்கு அடுத்து மிக உயர் விருதாக ஷேன் வோர்ன் விருது அமையவுள்ளது.

அவுஸ்திரேலிய, தென் ஆபிரிக்க அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதல் நாளில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

145 டெஸ்ட் போட்டிகளில் 708 விக்கெட்டுகளையும் 194 ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் .293. விக்கெட்டுகளையும் ஷேன் வோர்ன் கைப்பற்றியிருந்தார். (6)

# 189 ஓட்டங்களுக்குள் சுருண்டது தென்னாபிரிக்கா




அவுஸ்திரேலியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி அந்த அணிக்கு எதிராக 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இந்த தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 1-0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி நேற்று மெல்பேர்னில் ஆரம்பமாகியுள்ளது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதல் டெஸ்ட் போட்டி போலவே அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இதில் அணித்தலைவர் டீன் எல்கர் 26 ஓட்டங்களிலும் சாரெல் எர்வீ 18 ஓட்டங்க ளிலும் டீ புரூய்ன் 12 ஓட்டங்களிலும் டெம்பா பவுமா 1 ஓட்டத்திலும் ஜோண்டோ 5 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இதனால் அந்த அணி 67 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இதையடுத்து 6 ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த வெர்ரையன், மார்கோ ஜேன்சன் இருவரும் அரை சதம் அடித்து அணியை சரிவில் இருந்து மீட்டனர்.

அடுத்து வந்த வீரர்களும் விக்கெட்டுகளை இழந்ததால் அந்த அணி 68.4 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 189 ஓட்டங்களுக்கு சுருண்டது.


அவுஸ்திரேலிய அணி சார்பில் கேமரூன் கிரீன் 5 விக்கெட்டுக்களையும் ஸ்டார்க் 2 விக்கெட்டுக்களையும் கம்மின்ஸ், போலண்ட் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். (6)




அபிராமி




அஜந்தா




நிதேஷ்




கைலாஷ்




கபிலா




யுவதேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக விடுமுறை வழங்கும் நாடுகளில் 4 ஆம் இடத்தில் இலங்கை

(கொழும்பு)

உலகில் அரச விடுமுறைகள் அதிகம் வழங்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் நான்காவது இடத்தில் இலங்கை தரப்படுத்தப்பட்டுள்ளது.

190 நாடுகளை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த பட்டியலில் முதல் இடத்தை மியன்மார் பெற்றுள்ளது. இந்த ஆண்டில் மட்டும் 32 அரச விடுமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை, 5 முதல் 8 நாட்கள் தொடர்ச்சியாகவும் அங்கு விடுமுறைகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

30 அரச விடுமுறைகள் வழங்கப்பட்டுள்ள நேபாளம் இரண்டாம் இடத்திலும் 26 அரச விடுமுறைகள் வழங்கப்பட்ட ஈரான் 3 ஆம் இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை இந்த பட்டியலில் 4 ஆம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் இதுவரை 25 அரச விடுமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் மலேசியா, பங்களாதேஷ், எகிப்து, கம்போடியா ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் தரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ரி)

## சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

ரஷ்யா தனது எண்ணெய் உற்பத்தியை குறைக்கப் போவதாக தெரிவித்ததை அடுத்து சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை சடுதியாக உயர்ந்துள்ளது.

இதன்படி, கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை ஒரே நாளில் 2.94 டொலர்கள் (3.63%) அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 83.72 டொலர்களாக தற்போது பதிவாகியுள்ளது.அமெரிக்க டபிள்யூ.டி.ஐ. எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலையும் 2.07 (2.67%)டொலரால் அதிகரித்ததை அடுத்து தற்போது ஒரு பீப்பாய் எண்ணெயின் விலை 79.56 டொலர்களாக பதிவாகியுள்ளது.உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பிற்கு விடையளிக்கும் வகையில், மேற்கத்தேய நாடுகளின்ஜி-7 குழு ரஷ்ய கச்சா எண்ணெய் மீது 60 டொலர் அதிகரித்து உச்ச வரம்பை விதித்தது.

மற்றும் அதற்கு பதிலடியாக ரஷ்யா தனது தினசரி கச்சா எண்ணெய் உற்பத்தியை 500,000 முதல் 700,000 பீப்பாய்கள் வரை குறைக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டியது. (ரி)

சிவமயம்
ஓம் நமசிவாய

# ஈழத்துச் சிதம்பர நடைமுறைகளை இதயபூர்வமாக கடைப்பிடிப்போம்



வேண்டுந் தும்பரு நாரதர் விஞ்சையர்
பூண்ட நல்லிசை பாடுவர் பூதர்கள்
காண்ட கும்மியங் கட்டி முழக்கிங்கால்
தூண்டு மாலவட்டங்கள் துளக்குவார்.



திண்ணபுரத்திற்கு வந்து வழிபடுகின்ற தும்புருவும் நாரதரும் விஞ்சையரும், துதிப்பாடல்களை அவற்றுக்குரிமையான இன்னிசையுடன் பாடித் துதிப்பார்கள். பூத கணங்கள் அழகு மிக்க வாத்தியங்களைக் கட்டி முழக்கி, காற்றை வீசச் செய்யும் ஆல வட்டங்களை அசைப்பார்கள்.

- ஈழத்துச் சிதம்பர புராணம்

எமது ஆலய வரலாற்றை சற்று பின்நோக்கி பார்த்தால் ஆச்சரியமானது.சேதுக் கரையை (இந்தியா) காவல் செய்த சந்ததியில் வந்த ஆண்டி முனிவர் காரைநகர் வந்து திண்ணபுரத்தில் தங்கியிருந்தார்.அவர் கொண்டு வந்த வைரவரை (தற்சமயம் இருக்கும்) அரச மரத்தடியில் அமைத்து உள்ளன்போடு வழிபாடியற்றி வந்தார்.

இப்படியிருக்க திருவருள் வழிகாட்ட ஐயனார் வெளிப்பட்டது. இவ்வாறு வைரவர் அருகில் வைத்து அருள் மிகு இருவரையும் வழிபட்டு வருவதை அடியவர் மூலம் அறிந்து நிலத்தின் சொந்தக்காரரான அம்பலவி முருகர் வந்து அதில் கலந்து கொண்டார்.

ஆண்டி முருகரின் தோற்றம் பொலிவிலும் முகத்தில் வீசும் அருட்பொலிவையும் கண்டு அவர் வசமான அம்பலவி முருகர் திருமுறைகளையும் திருவாசகத்தையும் ஓதி வழிபாட்டை மிகைப்படுத்தினார்.

இவ்வாறு வழிபட்டதோடு ஆண்டி முருகர் அம்பலவி முருகருக்கு இப்போ இருக்கும் இடத்தைச் சுட்டி ஐயனாருக்குத் தனி ஆலயம் அமைக்கவும் வேண்டி இறையடி சேர்ந்தார்.

ஆண்டி வேண்டுகோள்படி ஐயனாருக்கு ஆலயம் ஸ்தாபித்து நித்திய, நைமித்திய உற்சவங்கள் சிறப்புற நடாத்தி வந்தார்.ஆனி உத்தரத்தையும். மார்கழித் திருவாதிரையும் தீர்த்தமாக கொண்டு உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்றன. அத்தோடு மார்கழித் திருவாதிரை அன்று திருவாசகம் முற்றோதலும் நடைபெற்றது.

அவர் தன் கைப்பட திருவாசகத்தை ஏட்டுச் சுவடியிலும் எழுதி வைத்தார்.இவ்வாறு பக்தி பூர்வமாக, உள்ளன்பாக வழிபாடுகள் நடைபெறும் போது அப்பூசையில் தில்லைக் கூத்தன் தரிசனத்தையும் கண்டு உணர்ந்து இன்புற்றார்.அவர் தன் உள்ளத்தில் வெளிப்பட்ட தூய காட்சியின் பெறுபேறு தான் நீங்கள் இன்று காணும் அருள்மிகு **ஈழத்துச் சிதம்பரத்தான்** ஆகும். ஓம் நமசிவாய திண்ணபுரத்துச் சிதம்பரத்தானே.

ஈழத்துச் சிதம்பரத்தில் பத்து நாளில் காலையும் மாலையுந் திருவெம்பாவைப் படிப்பார்கள். அந்தத் தில்லைச் சிதம்பரத்தில் நிகழும் முறைமைகள் தவறாமல் ஆதிரை விழா நிகழுந் தன்மையினால் அடியவர்களும் இத் தலத்தை **ஈழத்துச் சிதம்பரம்** என்று அன்பு பெருகச் சொல்லுவார்கள்.

மண்ணினிற் பிறந்தா ரெய்து மாண்பயனடியார் தம்மைத்
தண்ணமு தருத்து வித்தல் தகை விழாக் காண்டலென்று
கண்ணுதலுடைய பிள்ளை யருளிய கருத்தை நாளும்
எண்ணி மேற் கொள்ளுஞ் சிலரிருப்பது மேற்ற மன்றே.

பூமியிலே பிறந்தவர்கள் அடையும் சிறந்த பயன் சிவனடியார்களுக்கு இனிய **திருவமுது படைத்து அவர்களை உண்ணுவித்தல், அழகிய திருவிழாக்களைக் காணுதல்** என்று திருஞான சம்பந்தரது தேவாரம் " மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்" கருத்தை நாள்தோறும் நினைத்து மேற்கொண்டு ஒழுகும் ஒழுக்கத்திற்கு சிறந்த மேலோர் அந் நகரில் இருப்பதும் அந்நகருக்குப் பெரிய உயர்ச்சியாகும்.

- ஈழத்துச் சிதம்பர புராணம்

இங்கு நடைபெறும் பூசை வழிபாடுகள், நடைமுறைகள் எல்லாம் நீங்கள் அறிவீர்கள்.மார்கழித் திருவாதிரை உற்சவத்தில் கூத்தனைப் பார்த்த படி "வாசகர்" வலம் வர பஞ்ச மூர்த்தங்கள் எழுந்து வருவதும் திருவாசகம் ஓதப் பெறுவதும் கண் கொள்ளாக் காட்சியாகும்.இது தொடரப் பெற வேண்டும். மக்கள் விருப்பம் ஆகம விதிகளுக்கு மாறுபடாத வரை அவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டியது ஆலயம் தொடர்பான முடிவெடுப்பவர்களது கடமையாகும். ஓம் நமசிவாய திண்ணபுரத்தானே!

எனவே வழமையாக நடைபெறுவது போல் ஆலய மகோற்சவங்கள் சிறப்புற நடைபெற அவன் அருள் வேண்டி மனதாரப் பிரார்த்திப்போம்.

**மார்கழி மாதம் பூராகவும் திருவாசகம் ஓதுவோம்
திருவாதவூரடிகள் புராணம் ஓதுவோம் "ஓம் நமசிவாய"
அறிவுக்கு வடிவு என்று அறியாத என்னை
அறிவு வடிவு என்று அருள் செய்தான்- ஈழத்துச்
சிதம்பரத்தான்- ஓம்**



க.கு.க.சிவபாலன் (K.K.K)

(சி-5665)

# இராசிபலன்

27.12.2022
மார்கழி 12, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தி காலை 7.27 மணிவரை
பஞ்சமி பின்னிரவு 5.20 மணிவரை

அவிட்டம் முன்னிரவு 8.33 மணிவரை
சுபநேரம் 10.57-12.27 மணிவரை
இராகுகாலம் 3.27-4.57 மணிவரை

சந்திராஷ்டமம்
புனர்பூசம், பூசம்

வளவன்



மேஷம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.



கடகம்

கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு.



துலாம்

கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.



மகரம்

மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.



ரிஷபம்

சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாய்ப்புக்கள் தேடி வரலாம், காரிய அனுகூலமுண்டு.



சிம்மம்

தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.



விருச்சிகம்

சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.



கும்பம்

தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெற லாம், கற்பனை மிகுதியான நாள், சான்றோர்களின் சந்திப்புண்டு.



மிதுனம்

இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.



கன்னி

இனத்தார் பகை மாறி இன்பங்கள் கூடும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.



தனுசு

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நேற்றைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



மீனம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

திடமான உடலில் தான் திடமான மனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினைகளை தீர்க்கும் பொறுப்பு உலக நாடுகளுக்கு உள்ளது

## சிறிதரன் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

என்னதான் அடக்கு முறைகள் இருந்தாலும் அதிகாரம் இருந்தாலும் தமிழர்களது விடயத்தில் தலையிட வேண்டிய ஒரு தார்மீக கடமைகளும் பொறுப்புக்களும் சர்வதேச சமூகத்திடம் உள்ளது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தினர் நடத்திய கலை விழாவிலே கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஓர் இனத்தினுடைய மொழி, கலாசாரம், நிலம், பண்பாடுதான் அந்த இனம் இருக்கிறதா இல்லையா என்பதை தீர்மானிக்கின்ற கருவி.

இந்த மண்ணிற்கு நாங்கள் மூத்த குடிமக்கள். ஆகவே சிங்களவர்களுக்கு முன்பாகவே மூத்தவர்களாக இந்த மண்ணில் வாழ்ந்த நாங்கள் ஏன் எங்களுடைய பண்பாட்டையும் இன மொழி அடையாளத்தையும் நிலத்தையும் ஏன் நாங்கள் இழக்க வேண்டும்?

சாம்பலில் இருந்து மீண்டும் மீண்டும் எழுகின்ற பீனிக்ஸ் போன்ற ஓர்இனம்.

அதனால் தான் நாங்கள் இன்று உலக நாடுகளிடையே பேசு பொருளாக காணப்படுகின்றோம் எனத் தெரிவித்தார். (நி-6-104)

# வறுமைக்குட்பட்ட 10 மாவட்டங்களுக்குள் வடக்கின் 5 மாவட்டங்களும் உள்ளடக்கம்

## அங்கஜன் எம்.பி சுட்டிக்காட்டு

(சாவகச்சேரி)

நாட்டின் முதல் பத்து வறுமை மாவட்டங்களுக்குள் வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களும் உள்ளடங்குவதாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆனையிறவு தேசிய உப்பு நிறுவனத்தின் 20 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடியால் எமது மக்கள் அவஸ்தைப்படுகின்றனர். குறிப்பாக கிளிநொச்சி மாவட்டம் முதல் மூன்று வறுமை மாவட்டங்களில் ஒன்றாக காணப்படுகிறது.

அந்த மாவட்டத்தில் உள்ள உப்பு நிறுவனத்திற்கு உதவித்தொகை ஒன்றை வழங்க இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க முன்வந்திருப்பது தற்போதைய இக்கட்டான சூழ்நிலையை சமாளித்துக் கொண்டு அந்நிறுவனத்தை வளர்க்க பெரிதும் உதவியாக இருக்கும்.

கடந்த காலத்தில் ஆனையிறவு உப்பளம் போன்று ஒட்டுசுட்டான் தொழிற்சாலை; காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஆகிய பாரிய நிறுவனங்கள் வடக்கில் இருந்தன.

அந்த நிறுவனங்களை மீள ஆரம்பிப்பது தொடர்பில் அமைச்சர்கள் வாக்குறுதி வழங்கிய போதிலும் இன்று வரை அதனை நடைமுறைப்படுத்தவில்லை.

ஆனையிறவு உப்பு தென் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டே பொதி செய்யப்படுகிறது. இங்கே பொதி செய்யும் வசதிகளை ஏற்படுத்தும் போது சந்தைப்படுத்தல் மற்றும் வேலை வாய்ப்புக்களை எமது மாகாணத்திலும் அதிகரிக்க முடியும் என தெரிவித்தார். (நி-6-30)

# துன்னாலையில் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் துன்னாலை பகுதியில் 5 கிராம் 320 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 33 வயதான இளைஞர் ஒருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை போதைப் பொருளுடன் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (6-33)


# வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ம்பாணம்)

சுழிபுரம், தொல்புரம் மேற்கு மணிவாசகர் சன சமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர் வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அமரர். ஏ. சுப்பிரமணியம் ஞாபகார்த்த நூலக மண்டபத்தில் குறித்த நிலையத்தின் தலைவர் வே. நிஷாந் தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-6)



வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு அண்மையில் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியில் உதயகுமாரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் புத்தூர் நூலகத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் "புதுவை நாதம்" நூல் வெளியிடப்பட்டது.



2022 ஆம் ஆண்டு வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் மண்டபத்தில் மாபெரும் இரத்ததான நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.
(படம்- கஜிந்தன்)

# மாணவர்களின் புத்தகப்பையை சோதனையிடாது; அரசாங்கத்தில் உள்ள போதை வியாபாரிகளை கைது செய்ய வேண்டும்

## ஜே.வி.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள பாடசாலை மாணவர்களின் பைகளில் போதைப் பொருளை தேடும் காவல்துறை முதலில் அரசாங்கத்தில் உள்ள போதை வியாபாரிகளை கைது செய்தால் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தலாம் என ஜே.வி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர், இ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய ரணில் அரசாங்கம் பாடசாலை மாணவர்களை போதை வியாபாரிகளை தேடுவது போன்று அவர்களின் புத்தகப் பைகளை சோதனை செய்வதை நிறுத்த வேண்டும்.

இவர்களின் நோக்கம் போதைவஸ்தை ஒழிப்பதல்ல, நாட்டை பதற்ற நிலையில் வைத்திருந்து தமது அரசியல் இலாபங்களையும் சுகபோகங்களையும் அனுபவிப்பதே.

மாறாக பாடசாலை மாணவர்களுக்கு உள ரீதியான அழுத்தத்தை வழங்குவதற்காகவும் இந்த அரசாங்கம் அவர்களின் புத்தகப் பைகளை சோதனை செய்து வருகிறது.

நாட்டில் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றால் நாட்டுக்குள் போதைப் பொருட்களை இறக்குமதி செய்பவர்களை முதலில் கைது செய்ய வேண்டும்.

அவ்வாறில்லாமல் அப்பாவி மாணவர்களையும் போதை வியாபாரிகளாக இந்த அரசாங்கம் காட்ட நினைப்பதை முதலில் நிறுத்த வேண்டும் என தெரிவித்தார். (நி-6-104)

# சுகாதார சீர்கேடான முறையில் வீதியில் சோளன் விற்பனை

## குறித்த வியாபாரிக்கு எதிராக பிடியாணை பிறப்பித்தது மன்று

(யாழ்ப்பாணம்)

வீதியோரமாக சோளன் விற்பனையில் ஈடுபட்ட நபருக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்று திறந்த பிடியாணை பிறப்பித்துள்ளது.

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் , புத்தூர் சந்திக்கு அருகில் அவித்த சோளன் விற்பனையில் ஈடுபட்ட நபர் , சீர்கேடான முறையில் சோளன் விற்பனையில் ஈடுபட்டார் என மந்துவில் பொது சுகாதார பரிசோதகரால் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது , சோளன் விற்பனையில் ஈடுபட்டவர் நீதிமன்றில் முன்னிலையாக தவறியமையால் , அவருக்கு எதிராக மன்று திறந்த பிடியாணை பிறப்பித்துள்ளது. (நி-33)

# நான்கு விதமான பயிர்ச் செய்கைகள் பூச்சிய உற்பத்திகளாக அடையாளம்

## யாழ்.மாவட்ட விவசாய பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வழமையாக மேற்கொள்ளப்படும் பயிர்செய்கையில் நான்கு விதமான பயிர்ச்செய்கை பூச்சிய உற்பத்தியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட விவசாய பணிப்பாளர் கைலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

சிறிய தினை , பெரிய வெங்காயம் , உருளைக்கிழங்கு மற்றும் இஞ்சி ஆகிய நான்கு பயிர்ச் செய்கைகளை விவசாயிகள் கைவிட்டமையால் , அவை பூச்சிய நிலையை அடைந்துள்ளது.

குறிப்பாக சங்கானை பிரதேச செயலக பிரிவில் , அராலி பகுதியில் பெரிய வெங்காய பயிர்ச்செய்கையும் கோப்பாய் , உடுவில் பிரதேச செயலக பிரிவில் , உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையும் மற்றும் தினை, இஞ்சி ஆகிய பயிர்ச்செய்கையும் அதிகளவில் இடம்பெற்று வந்த நிலையில் காலநிலை மாற்றம் காரணமாக விவசாயிகள் செய்கைகளை கைவிட்டு உள்ளமையால் அவை பூச்சிய நிலையை அடைந்துள்ளது என தெரிவித்தார். (நி-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் 11 மாதங்களில் 3,596 கடத்தல் சம்பவங்கள்

## பொலிஸ் அறிக்கைகள் உறுதிப்படுத்துவதாக தகவல்

(கொழும்பு)
பல்வேறு காரணங்களுக் காக இந்த வருடத்தின் முதல் 11 மாதங்களில் 3,596 ஆட் கடத்தல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளமையை பொலிஸ் அறிக்கைகள் உறுதிப்படுத்து வதாக பேராதனை பல்கலை க்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளியியல் கற்கை கள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு 835 சம்பவங்களே இடம்பெற்றன. கடத்தல் சம்பவ ங்கள் அச்சம் தரும் விதத்தில் பெருமளவு அதி கரித்துள்ளதை இது வெளிப்படு த்தியுள்ளது என அவர் தெரிவித் துள்ளார். (நி)

# சீரற்ற காலநிலை காரணமாக 3 மாவட்டங்கள் முழுமையாக பாதிப்பு



(கொழும்பு)
சீரற்ற காலநிலை காரண மாக நாட்டின் 3 மாவட்டங்களில் 1500 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அன ர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய மாத்தளை, கண்டி மற்றும் அம்பாறை மாவட்டங்களில் 346 குடும்பங் களைச் சேர்ந்த 1,511 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர்.

அத்துடன் சீரற்ற கால நிலை காரணமாக 66 வீடுகள் பகுதி யளவில் சேதம டைந்துள்ள தோடு இருவர் உயிரி ழந்துள்ள துடன் மூவர் காய மடைந்துள்ள னர். (நி)


## JAFFNA MEDICAL ASSOCIATION
## ANNUAL GENERAL MEETING – 2023
## NOTICE OF MEETING

Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association will be held on Saturday, 11th February 2023 at 11.00 a.m at the Nurses Training School Lecture Hall Teaching Hospital Jaffna, for the following purposes;

1. To receive and consider the Annual report of the committee of Management on the affairs of the company and the statement of accounts for the year ended 31st December 2022 and the report of the auditors there on.
2. To consider any resolutions proposed by members and committee where due Notice has been given.
3. To elect the committee of management for year 2023.
4. To appoint the auditors of the association and to authorize the committee of Management to determine their remuneration.

By order of the committee of management,

Honorary Secretary
27th December 2022 (13886)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

தேசிய கல்வி நிறுவகத்தில்
27.12.2022 இன்று BMICH
இல் இடம்பெறும் பட்டமளிப்பு
விழாவில் கல்விமாணி (B Ed)

**திருமதி.ஜீன் பிரவீனா சதீசன்**

அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு மேலும்
பல உயர்ச்சிகளைப் பெற அன்னை
புவனேஸ்வரி அம்பாளை வேண்டுகின்றோம்.



ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/நடேஸ்வரக் கல்லூரி
காங்கேசன்துறை.

(13915)



# மணிவிழா வாழ்த்து

## திரு.நவரத்தினம் பரமேஸ்வரன்

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில்
எம்முடன் 30 வருடங்களுக்கு மேலாக
சிறப்பாகப் பணியாற்றி இன்று தனது
60 ஆவது அகவையில் ஓய்வு பெற்றுச் செல்லும்
எமது சக உத்தியோகத்தர்
**திரு.நவரத்தினம் பரமேஸ்வரன்**
அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களைத்
தெரிவிப்பதோடு அவர் தனது
ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும்
உடல் உள ஆரோக்கியத்துடனும்
இருக்க எல்லாம் வல்ல இறைவனை
வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.



(13895)

Congratulations

வாழ்த்துவோர்:
பொதுசன நூலக ஊழியர் நலன்புரிச் சங்கம்.



# சேவை நலன் பாராட்டு

## திரு.சோமசுந்தரம் திருக்குமார்



Best Wishes

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில்
எம்முடன் 30 வருடங்களுக்கு
மேலாக சிறப்பாகப் பணியாற்றி
இன்று தனது 55 ஆவது
அகவையில் ஓய்வு பெற்றுச்
செல்லும் எமது சக உத்தியோகத்தர்
**திரு.சோமசுந்தரம் திருக்குமார்**
அவர்களுக்கு பிறந்த
நாள் வாழ்த்துக்களைத்
தெரிவிப்பதோடு அவர் தனது ஓய்வு
காலத்தில் சீரும் சிறப்புடனும்
உடல் உள ஆரோக்கியத்துடனும்
இருக்க எல்லாம் வல்ல இறைவனை
வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

(13895)

வாழ்த்துவோர்:
பொதுசன நூலக ஊழியர் நலன்புரிச் சங்கம்.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: விசாகம் 3
கி.பா: சூரி.செவ் 5 இல்
தகைமை/தொழில்:A/L (வியாபாரம்)
எதிர்பார்ப்பு: படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/13217

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 1
கி.பா: சூரி 2 செவ் 1 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: A/L (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/13219

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: விசாகம் 3
கி.பா: சூரி 5 செவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/13221

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 4
கி.பா: 27 சூரி 2 செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc in Civil Engineer
எதிர்பார்ப்பு: வைத்தியர்.பொறியியலாளர் பட்டதாரி
தொ.இ: B/13222

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: சதயம் 2
கி.பா: சூரி. செவ் 1 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/13247

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அத்தம் 2.
கி.பா: சூரி. செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BSc பட்டதாரி (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: அரச.தனியார் உத்தியோகம்
தொ.இ:G/13248

பிறப்பு: 2002 இந்து
நட்சத்திரம்: ரோகினி 3
கி.பா: சூரி. செவ் 1 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/13249

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா: சூரி 2 செவ் 4 இல்
உயரம்: 168 cm
தகைமை/தொழில்: A/L ,Diploma in Beauty (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/13250

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500/- ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500/- அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 60





"நான் என்ன உதவி செய்ய முடியும்? பழுவேட்டரையர் இந்தச் சோழப் பேரரசையே ஆட்டுவிக்கும் ஆற்றல் உடையவர். நானோ ஒரு செல்வாக்குமில்லாத தன்னந் தனி ஆள். என்னால் என்ன செய்ய முடியும்?" என்று வந்தியத்தேவன் ஜாக்கிரதையாகவே பேசினான்.

பிறகு, "நம்பிகளே! இராஜாங்க காரியங்களைப் பற்றி உமக்கு ஒன்றுமே தெரியாது என்றா சொல்கிறீர்கள். சுந்தர சோழ மகாராஜாவுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், அடுத்த பட்டத்துக்கு உரியவர் யார் என்று உம்மால் சொல்ல முடியாதா?" என்றான்.

இப்படிக் கேட்டு விட்டு, அடியானுடைய முகபாவத்தில் ஏதாவது மாறுதல் ஏற்படுகிறதா என்று வந்தியத்தேவன் ஆவலுடன் பார்த்தான். அவரிடம் மாறுதல் ஏற்படவில்லை.

"அதெல்லாம் எனக்கு என்ன தெரியும், தம்பி! குடந்தை சோதிடரைக் கேட்டால் ஒருவேளை சொல்வார்!" என்றான் நம்பி.

"ஓஹோ! குடந்தை சோதிடர் உண்மையிலே அவ்வளவு கெட்டிக்காரர்தானா?"

"அசாத்திய கெட்டிக்காரர்! சோதிடமும் பார்த்துச் சொல்வார் மனதையும் அறிந்து சொல்வார். உலக விவகாரங்களை அறிந்து, அதற்கேற்பவும் ஆருடம் சொல்லுவார்!"

"அப்படியானால் அவரைப் பார்த்து விட்டுப் போக வேண்டியதுதான்!" என்று வந்தியத்தேவன் மனதில் தீர்மானித்துக் கொண்டான்.

ஆதிகாலத்திலிருந்து மனித குலத்துக்கு வருங்கால நிகழ்ச்சிகளை அறிந்து கொள்வதில் பிரமை இருந்து வருகிறது. அரசர்களுக்கும் அந்தப் பிரமை உண்டு. ஆண்டிகளுக்கும் உண்டு; முற்றும் துறந்த முனிவர்களுக்கும் உண்டு; இல்லறத்தில் உள்ள ஜனங்களுக்கும் உண்டு; அறிவிற் சிறந்த மேதாவிகளுக்கும் உண்டு; மூடமதியினர்களுக்கும் உண்டு. இத்தகைய பிரமை, நாடு நகரங்களைக் கடந்து பல அபாயங்களுக்குத் துணிந்து, அரசாங்க அந்தரங்கப் பணியை நிறைவேற்றுவதற்காகப் பிரயாணம் செய்துகொண்டிருந்த நம்முடைய வாலிப வீரனுக்கும் இருந்ததில் ஆச்சரியம் இல்லை அல்லவா?

### பதின் மூன்றாம் அத்தியாயம்

### வளர்பிறைச் சந்திரன்

இளவரசிகளின் ரதம் கண்ணுக்கு மறைந்த பிறகு, சோதிடர் வந்தியத்தேவனை வீட்டுக்குள் அழைத்துச் சென்றார். தம்முடைய ஆஸ்தான பீடத்தில் அமர்ந்தார். சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்த அவ்வாலிபனையும் உட்காரச் சொன்னார். அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

"தம்பி! நீ யார்? எங்கே வந்தாய்?" என்று கேட்டார், வந்தியத்தேவன் சிரித்தான்.

"என்னப்பா, சிரிக்கிறாய்?"

"இல்லை, தாங்கள் இவ்வளவு பிரபலமான சோதிடர் என்னை கேள்வி கேட்கிறீர்களே? நான் யார், எதற்காகத் தங்களிடம் வந்தேன் என்று சோதிடத்திலேயே பார்த்துக் கொள்ளக் கூடாதா?"

"ஓகோ! அதற்கென்ன? பார்த்துக் கொள்கிறேன். ஆனால் எனக்கு நானே சோதிடம் பார்த்துக் கொண்டால், தட்சிணை யார் கொடுப்பார்கள் என்று தான் யோசிக்கிறேன்."

வந்தியத்தேவன் புன்னகை செய்து விட்டு, "சோதிடரே! இப்போது இங்கே வந்துவிட்டுப் போனார்களே? அவர்கள் யார்?" என்று கேட்டான்.

"ஓ! அவர்களா? நீ யாரைப் பற்றிக் கேட்கிறாய் என்று எனக்குத் தெரிகிறது. தெரியும் தம்பி, தெரியும்! நீ என் சீடனைப் பிடித்து இழுத்துக் கொண்டு உள்ளே நுழைந்த போது இங்கே இருந்தார்களே, அவர்களைப் பற்றித்தான் கேட்கிறாய், இல்லையா? ரதத்தில் ஏறிக் கொண்டு, பின்னால் புழுதியைக் கிளப்பி விட்டுக் கொண்டு போனார்களே, அவர்களைப் பற்றித்தானே?" என்று குடந்தை சோதிடர் சுற்றி வளைத்துக் கேட்டார்.

"ஆமாம், ஆமாம்! அவர்களைப் பற்றித் தான் கேட்டேன்"

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்

## ஆறு விழுங்கியது யாரை?

ஒரே நேரத்தில் அத்தனை பேரும் பெருமூச்சு விட்டுப் பயம் தெளிந்தார்கள். சந்தோஷம் அவர்களைத் தழுவியது. கூடவே ஒரு பயமும் அவர்களைத் தழுவியது. எல்லாருமே ஆபத்து இல்லாமல் கரையை அடைந்து விட்டோமா.... அல்லது யாரையாவது அந்த ஆறு வஞ்சகமாக விழுங்கித் தின்று விட்டிருக்குமா? அப்படி ஒரு பயம்... முதலில் மூடனைத்தான் பலமாகப் பற்றிக் கொண்டது.

கரையை அடைந்ததுமே அவர்கள் எல்லாருக்கும் கரைகாணாத மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் அது அதிக நேரம் நீடிக்காமல் கரைந்து போய் விட்டது.

"நாம் எல்லாரும் ஆபத்து இல்லாமல் கரைக்கு வந்து விட்டோமா... அல்லது யாராவது காணாமல் போய் விட்டோமா... என்று கண்டுபிடித்தாக வேண்டும். எனக்கென்னவோ பயமாக இருக்கிறது. இதுவோ பொல்லாத ஆறு அமைதியாக இருந்தாலும் இதன் பொல்லாத்தனம் போய் விடுமா என்ன...? மிகவும் சாது போல் இருப்பவர்களை நம்பித்தான் சுலபத்தில் ஏமாந்து விடுகிறார்கள்.

நாம் ஆறு பேர் இல்லையா. முதலில் எண்ணிப் பார்த்து விடுகிறேன்" என்று மனம் துடியாய்த் துடிக்க... ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்று எண்ணினான் மூடன். இரண்டு தடவை எண்ணிய போதும் ஐந்து தான் வந்தது. அவன் கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருகியது.

"ஐயையோ! ஐந்து பேர்தானே இருக்கிறோம். ஒன்று குறைகிறதே, எண்ணினால் ஆறு வர வேண்டாமா?" என்று 'ஓ' வென அழுதான் மூடன்.

"அப்படியா! இரு! நான் எண்ணிப் பார்க்கிறேன்" என்று குரு பரபரப்புடன் அவர்களை வரிசையாக நிற்க வைத்து எண்ணிப் பார்த்தார். ஆளைத் தொட்டுத் தொட்டு எண்ணிப் பார்த்தார். ஐந்து பேர் தாம் இருந்தார்கள். ஆறாவது ஆள் எங்கே? ஆற்றோடு போய் விட்டானா?

குருவுக்கும் அழுகை பீறிட்டு கொண்டு வந்தது. யாரோ ஒரு சிஷ்யன் குறைகிறான். ஐயோ அவன் தலை எழுத்து இப்படியா ஆக வேண்டும்! "ஏ! பொல்லாத ஆறே நீ இப்படி எத்தனை பேரை விழுங்கியிருக்கிறாய்?" என்று அடக்க முடியாத அழுகையோடு ஆற்றை நோக்கி சபித்தார்.

ஒவ்வொருவரும் எண்ணிப் பார்த்தார்கள். யார் எண்ணியும் ஐந்து பேர்தாம்... ஆறாவது யார்? ஆறு விழுங்கியது யாரை? அவர்களால் கண்டுபிடிக்கவே முடியவில்லை! யாரோ ஒருவன் ஆற்றுக்குப் பலியாகி விட்டான்! கடவுளே... எங்களுக்கா இந்தக் கதி வர வேண்டும்.' அவர்கள் ஒருவரை யொருவர் கட்டிக் கொண்டு அழுதார்கள்.

தேற்றுவாரின்றி அவர்கள் தேம்பியழுதார்கள். புறப்பட்டபோது ஆறு பேராகப் புறப்பட்டுத் திரும்பும் போது ஐந்து பேராகப் போய்ச் சேர்வது எவ்வளவு பெரிய கொடுமை!

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.
~ கோன்பு தஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் கட்சிகளுக்கு ஓர் அவசர கடிதம்

அன்புக்குரிய தமிழ் அரசியல் கட்சியினருக்கு அன்பு வணக்கம்.

காலம் கனிந்திருக்கிறது. இயற்கை களம் அமைத்திருக்கிறது. இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டே ஆகவேண்டும் என்ற கட்டாயம் சிங்கள அரசியல் தரப்புகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த இடத்தில்தான் சந்தர்ப்ப சூழலைத் தக்க முறையில் பயன்படுத்த வேண்டிய மிகப் பெரும் பொறுப்பு தமிழ் அரசியல் தரப்புகள் முன் எழுந்து நிற்கிறது.

எனவே நாம் பொறுப்பற்றவர்களாக நடந்து கொள்வோமாயின், அஃது மன்னிக்க முடியாத பெரும் குற்றமாகும்.

'தவிர, தற்போதிருக்கக்கூடிய தமிழ் அரசியல் கட்சிகளின் அஸ்தமனமும் இதிலிருந்து ஆரம்பமாகும் என்பதையும் மறந்துவிடலாகாது.

இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழர் தரப்பிடம் ஒற்றுமையில்லை என்ற கருத்துக்களை சிங்களத் தரப்புகள் தற்போது முன்வைப்பதைக் காண முடிகிறது.

இது சர்வதேச ரீதியில் அவர்கள் மேற்கொள்கின்ற பிரசாரமாகக் கருதப்படலாம்.

அதேநேரம் சிங்களத் தரப்புகள் முன்வைக்கின்ற மேற்போந்த கருத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற விடயத்தில் தமிழ் அரசியல் தரப்புகளுக்கு கருசனை இல்லை என்பது போலவும் அவர்களின் ஒத்துழைப்பின்மையாலேயே இனப் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்க முடிவதில்லை என்பதான கருத்துருவாக்கமும் பொதிந்திருப்பதை நாம் உய்த்துணரலாம்.

இந்த இடத்தில்தான் தமிழ் அரசியல் தரப்புகள் ஒன்றுபட்டு ஓரணியில் இயங்குவது கட்டாயமானதாகின்றது.

ஏனெனில் இனப் பிரச்சினையைத் தீர்த்தே ஆக வேண்டும் என்ற முடிவு சிங்களத் தரப்புகள் தாமாக எடுத்ததல்ல.

மாறாக சர்வதேச ரீதியில் இலங்கை ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள அழுத்தம் மற்றும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை எதிர்நோக்குகின்ற சிக்கல்கள்.

நாடு எதிர்கொள்கின்ற பொருளாதார நெருக்கடி என பல காரணங்கள் தீர்வின் அவசியத்தை மையப்படுத்தியுள்ளன.

எனவே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்ற அரச தரப்பின் முன்னெடுப்புகளுக்கு தமிழ்த் தரப்புகள் வழங்குகின்ற ஒத்துழைப்புகள் எவ்வாறாக உள்ளதென்பதை சர்வதேச சமூகம் உன்னிப்பாகக் கவனிக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

எனவே இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழ் அரசியல் தரப்புகள் விரும்பியோ விரும்பாமலோ ஒன்றுபட்டே ஆக வேண்டும் என்பது நிராகரிக்க முடியாத நிதர்சனம்.

அந்தவகையில் கடந்த 24ஆம் திகதி தமிழ் அரசியல் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடி நிலைமையை ஆராய்ந்துள்ளமை வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

இதில் ஒரு சில தமிழ் அரசியல் கட்சிகள் பங்கேற்றகாமை மனதுக்கு கஷ்டமாக இருந்தாலும் கணிசமான தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டிருப்பது நம்பிக்கையை ஏற்படுத்துவாகவுள்ளது.

இந்த ஒற்றுமை எந்தவகையிலும் தொடர வேண்டும். அதுவே எமக்கான பலமாகும்.

# பெரும்பான்மையான உறுப்பினர்களின் இணக்கத்தின் படியே தீர்மானம்

## பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்

(கொழும்பு)

பெரும்பான்மையான உறுப்பினர்களின் இணக்கத்தின் அடிப்படையிலேயே எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படும் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி விக்னேஸ்வரன் தன்னிச்சையான தீர்மானங்களை எடுப்பதாக ஈழத்தமிழர் சுயாட்சி கழகப் பொதுச் செயலாளரும் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அனந்தி சசிதரன் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இது தொடர்பில், கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன், கூட்டணியின் அனைத்து உறுப்பினர்களுடனும் கலந்துரையாடியதன் பின்னரே எந்தவொரு தீர்மானமும் இறுதி செய்யப்படும் என குறிப்பிட்டார்.

அந்த தீர்மானங்கள் கூட்டணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும்.அதற்கு ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டால், அந்த விடயம் குறித்து மறுபரீசிலனையும் செய்யப்படும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது.

நீண்ட நாட்களாக கூட்டணியின் கலந்துரையாடல்களில் அனந்தி சசிதரன் பங்கேற்பதில்லை எனவும் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார். இதேவேளை, தமிழ் மக்களின் தீர்க்கப்படாதுள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் தமிழ் தேசிய கட்சிகளிடம் ஒருமித்த கொள்கைநிலவுவதால் இணைந்து பயணிப்பது சாத்தியமான விடயம் எனவும் அவர் குறிப்பிட்டார். (4,7)

## சீரற்ற காலநிலை; 1,500 பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையினால் மூன்று மாவட்டங்களில் 1,500க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மாத்தளை, கண்டி மற்றும் அம்பாறை மாவட்டங்களில் 346 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 1,511பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் பெய்த கனமழையால் 2 பேர் உயிரிழந்துள்ளனர், 3 பேர் காயமடைந்துள்ளனர்.

66க்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.(4,7)

## 11 மாதங்களில் 3,596 ஆட்கடத்தல்கள்

நாட்டில் இந்த வருடத்தின் முதல் 11 மாதங்களில் பல்வேறு காரணங்களுக்காக 3,596 ஆட்கடத்தல்கள் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் அறிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்த பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் துறையின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

அதேவேளை கடந்த ஆண்டுடன் (2021) ஒப்பிடுகையில் கடத்தல்களின் எண்ணிக்கை சுமார் 2,800 அதிகரிப்பு என அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் 2021 ஆம் ஆண்டில் கடத்தல்களின் எண்ணிக்கை 835 என்றும் பேராசிரியர் குறிப்பிட்டார். (4,7)

## இராணுவ அதிகாரிக்கு அமெரிக்கா தடை

### கை விரித்தார் அலி சப்ரி

இலங்கை இராணுவ அதிகாரிக்கு எதிராக அமெரிக்கா விதித்த தடை தொடர்பில் இலங்கை அமெரிக்காவுடன் மோதல் போக்கை கடைப்பிடிக்காது என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இது அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் சுயாதீனமான நடவடிக்கை என தெரிவித்த அவர், இலங்கை அரசாங்கம் கரிசனைகளை வெளியிடும் ஆனால் தனிப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் எதனையும் தெரிவிக்காது எனவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் இவ்வாறான விடயங்கள் குறித்து ஆராய்வதற்கான சுயாதீன வழிமுறைகளை கொண்டுள்ளதாக குறிப்பிட்ட அலிசப்ரி, இது தொடர்பில் நாங்கள் செய்யக் கூடியது எதுவுமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதோடு நாங்கள் தொடர்ந்து எங்கள் நிலைப்பாட்டை முன்வைப்போம் ஆனால் எங்களால் எதனையும் செய்ய முடியாது எனவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மேலும் தெரிவித்துள்ளார். (4,7)

## ரஷ்யாவிலிருந்து மத்தலவிற்கு மற்றொரு விமான சேவை

(கொழும்பு)

ரஷ்யாவில் இருந்து மத்தலவிற்கு மற்றுமொரு விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக ரஷ்யாவிலுள்ள இலங்கை தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய விமான சேவை நாளை முதல் தொடங்கப்படும் என அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாஸ்கோவில் இருந்து மத்தல சர்வதேச விமான நிலையத்திற்கு வாரத்திற்கு இருமுறை விமானங்களை இயக்க குறித்த விமான நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்த புதிய விமான சேவை ஆரம்பிக்கப்படுமாயின் இலங்கைக்கும் ரஷ்யாவிற்கும் இடையில் 3 நேரடி விமான சேவைகள் இடம்பெறவுள்ளன. (4,7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **வவுனியா பிரதேச** [illegible] ஆலை, [illegible] ஆலை -காத்தான் கோட்டம், ஆசிக்குளம், எல்லப்பர் மருதங்குளம், கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம், கோவில் குளம் 10 ஆம் ஒழுங்கை, மறக்கரம்பளை - கணேசபுரம், மதுராநகர் கல்நாட்டினகுளம், பெரியகூமரசங்குளம், சமணங்குளம், [illegible] இடங்களிலும் மின் விநியோகம் தடைப்படும்.

## கல்வி நிர்வாக சேவையில் 800 வெற்றிடங்கள்

### கல்வி அமைச்சர்

(கொழும்பு)

கல்வி நிர்வாக சேவையில் சுமார் 800 பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதற்கமைய அந்த வெற்றிடங்களுக்கான பரீட்சை மிக விரைவில் நடத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தின் புதிய ஓய்வூதியக் கொள்கையின் படி, இம்மாதம் 31ஆம் திகதி ஓய்வுபெறவுள்ள கல்வி அமைச்சின் அதிகாரிகளின் வெற்றிடங்களுக்கு புதிய அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனவரி 10 இற்கு முன்

# உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்படும்-அளுத்கமகே

(கொழும்பு)

எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் நாட்டில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் கலைக்கப்படும் என் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

தேசிய தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் 10 ஆம் திகதிக்குள் கலைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்ட பின்னர் 14 நாட்களுக்குள் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதற்கிடையில், தேர்தல் திகதியை ஜனவரி 5 ஆம் திகதிக்கு முன்னதாக அறிவிப்போம் என தேர்தல் ஆணைக்குழு நேற்று முன்தினம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## மண்டைக்கல்லாறு பகுதியில்

# உலக வங்கியின் நிதியுதவியில் உவர்நீர் தடுப்பணை

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட மண்டைக் கல்லாறுக்கு ஊடாக பயிர்ச் செய்கை நிலங்களுக்குள் உவர் நீர் உட்புகுதலை தடுக்கும் வகையில் சுமார் 495 மில்லியன் ரூபாய் செலவில் கதவுகளுடன் கூடிய உவர்நீர் தடுப்பணையை அமைக்கும் பணிகள் உலக வங்கியின் நிதி உதவியுடன் அடுத்த ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி பூநகரி மண்டைக்கல்லாற்றுக்கான உவர்நீர் தடுப்பணை இதுவரை அமைக்கப்படாமையினால் கடல் பெருக்கு காலங்களில் கடல் நீரானது மண்டைக்கல்லாறினூடாக உட்புகுந்து கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வன்னேரிக்குளம், குஞ்சுக்குளம், மண்ணியாகுளம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மண்டைக்கல்லாறின் ஊடாகப் பெருக்கெடுக்கும் உவர்நீர் காரணமாக சுமார் 6,140 ஏக்கர் வரையான நிலங்கள் உவர் நிலங்களாக மாறியுள்ளதுடன் வெற்றுத் தரவைகளாகவே காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் ஏ 32 வீதியில் மண்டைக்கல்லாறு பாலத்துக்கு அண்மித்த பகுதியில் மேற்படி பிரதேசங்களுக்குள் கடல்நீர் உட்புகுவதை தடுக்கும் வகையில் உலக வங்கியின் நிதி உதவியுடன் கதவுகளுடன் கூடிய உவர்நீர் தடுப்பணை அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் அடுத்த ஆண்டில் முன்னெடுக்கப்பட உள்ளன.

இந்த வேலைத் திட்டம் நிறைவுற்ற பின்னர் மேற்படி உவர்நிலங்களாக காணப்படுகின்ற சுமார் 6,140 ஏக்கர் நிலங்களில் பெரும்பகுதி பயிர்ச்செய்கை நிலங்களாக எதிர்காலத்தில் மாறக்கூடியதாக அமையும்.

அத்துடன் குறித்த நிலங்களில் ஒரு பகுதியை கால்நடைகளுக்கான மேய்ச்சல் தேவைகளுக்கும் பயன்படுத்த முடியும் என்றும் கிளிநொச்சி மேற்கு நீர்ப் பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-315)




தம்பிப்பிள்ளை அறக்கட்டளை நிதியம் சார்பாக கணனி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் யா/கோப்பாய் மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் எஸ்.மோகனராஜன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவர்களான தம்பிப்பிள்ளை வரதராஜா, திருமதி.இரஞ்சனாதேவி கருணானந்தன், திருமதி.கலா கருணராசன் ஆகியோரால் ஒரு மடிக்கணனியும் இரண்டு கணனிகளும் வழங்கி வைக்கப்பட்டன. அமரர்.தம்பிப்பிள்ளை அமரத்துவமடைந்த 50 ஆவது ஆண்டை நினைவுகூரும் முகமாக இந்த நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் பாவனைக்கு எதிராக மன்னாரில் விழிப்புணர்வு நடைபவனி

(மன்னார்)

இலங்கையில் சாரணர் இயக்கம் தனது சேவையை ஆரம்பித்து 110 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விதமாக கடந்த வெள்ளிக்கிழமை விழிப்புணர்வு நடைபவனி மற்றும் சாரண இயக்க 110 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும் மன்னார் நகர சபை மைதானத்தில் இடம்பெற்றது.



மன்னார் சாரணர் இயக்கத்தின் ஏற்பாட்டில் சாரணர் இயக்க மன்னார் மாவட்ட ஆணையாளர் ஸ்ரான்லி டிமேல் தலைமையில் ஆரம்பமான விழிப்புணர்வு நடைபவனியில் இளைஞர்கள் மத்தியில் ஊடுருவி வரும் போதைப் பொருளுக்கு எதிராக எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மாணவர்கள் ஊர்வலமாக வருகை தந்ததுடன் இன நல்லிணக்கம் மற்றும் சமத்துவத்தை வெளிப்படுத்தக்கூடிய பதாகைகளையும் காட்சிப்படுத்தியவாறு ஊர் வலத்தில் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 10 பாடசாலைகளைச் சேர்ந்த 400 இற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-285)



முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் நிதி அனுசரணையுடன் முல்லைதீவு மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

(படம்:- யதுபாஸ்கரன்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 550 | 600 | 530 | 450 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 330 | 400 |
| தக்காளி | 300 | 250 | 280 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| கோவா | 140 | 120 | 200 | 200 |
| கரட் | 200 | 350 | 330 | 400 |
| பூசணி | 100 | 100 | 100 | 150 |
| புடோல் | 300 | 280 | 200 | 250 |
| வாழைக்காய் | 150 | 150 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 600 | 500 | 700 | 800 |
| பெரிய வெங்காயம் | 230 | 180 | 180 | 250 |
| பாகற்காய் | 600 | 600 | 500 | 600 |
| வெண்டக்காய் | 200 | 200 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 450 | 500 | 430 | 400 |
| லீக்ஸ் | 450 | 300 | 420 | 450 |
| பீற்றூட் | 400 | 380 | -- | 400 |
| கறிமிளகாய் | 800 | 700 | -- | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 480 | 450 | 460 | 450 |
| கத்தரிதம்புள்ள | 500 | 550 | -- | 360 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 150 | 200 |
| தேசிக்காய் | 150 | 100 | 150 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 350 | -- | 350 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 200 | 200 | 140 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 50 | 50 | 40 |
| ஈரப்பலா | 150 | 160 | -- | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப் பிரச்சினை...

வில்லை எனக் கூறினார்.

ஐ.நா.உட்பட உலக நாடுகள் கொடுக்கும் நெருக்கடி காரணமாக ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்திருக்கலாம் என்றும் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தமிழர்களுக்கான தீர்வு குறித்த விடயத்தில் சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பதால் நியாயமான தீர்வு கிடைக்கலாம் என்றும் குறிப்பிட்டார். (4-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 25/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1435
வெற்றி இலக்கங்கள்
மகரம் 1 4 7 2 7 3
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.12.25
சீட்டிழுப்பு இலக்கம் 289
வெற்றி இலக்கங்கள்
துலாம் 01 15 45 57 துலாம்
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 26/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1436
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 0 5 2 8 9 1
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.12.26
சீட்டிழுப்பு இலக்கம் - 1011
U 01 47 81 82
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத
திகதி 2022.12.26
சீட்டிழுப்பு இலக்கம் 3223
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
B 07 10 20 72
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 26/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1329
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
W 03 41 52 54 80

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.12.26
சீட்டிழுப்பு இலக்கம் 290
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 06 36 38 49 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/12/26
சீட்டிழுப்பு இலக்கம் 4981
N 6 7 3 4 2 9
தேசிய லொத்தர் சபை


## அமெரிக்கா...

விக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய வின் மனைவி அயோமா ராஜபக்ஷ, அவரது மகன், மருமகள் மற்றும் பேரப்பிள்ளை ஆகியோர் நேற்றுக் காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக வெளிநாடு சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரத்தியேகச் செயலாளர் சுகீஸ்வர பண்டார விடம் இதுகுறித்து வினவியபோது, அமெரிக்கா செல்லும் தனது முடிவை மாற்றிக்கொண்டு கோட்டாபய டுபாயில் தங்கியிருப்பார் என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரது குடும்பத்தினர் வெளிநாட்டு சுற்றுலா சென்றுள்ளதாகவும் உள்ளக தகவல் தரப்புகள் தெரிவிக்கின்றன. (4-7)

## முல்லைத்தீவு...

தேசத்தினைச் சேர்ந்த 56 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்தின் போது காயமடைந்த மற்றைய மீனவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-7)

## ஆயிரம் போதை...

சேர்ந்த 24 மற்றும் 25 வயதுடைய இரு இளைஞர்களை போதைப்பொருட்களுடன் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களையும் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை 5 கிராம் ஐஸ் போதைப் பொருள் உடைமையில் வைத்திருந்தால் அவர்களுக்கு மரண தண்டனை உறுதி என அண்மையில் நீதி அமைச்சர் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7,33,104)

## விபத்தில் படுகாய...

ஓட்டிச்சென்றுள்ளார்.

இதனையடுத்து வாகனம் பயணித்துக்கொண்டிருக்கும்போது வாகனத்தில் இருந்து மாணவி ஒருவரும் மாணவர் ஒருவரும் குதித்துள்ளனர்.

இதன்போது தலையில் படுகாயமடைந்த முறிப்பு பகுதியினை சேர்ந்த 15 வயதுடைய மாணவி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார்.

இதனையடுத்து, மீண்டும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

விபத்து சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7)

## மக்களை வதைக்...

ளாகும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் கடற்படையினர் வீதியில் செல்பவர்களை காணொளி எடுத்து அச்சுறுத்தும் விதத்தில் செயற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# இடமாற்றம் தொடர்பில் எழுத்து மூலமாக அறிவிக்கப்படவில்லை

### யாழ்.அரச அதிபர் மகேசன்

இடமாற்றம் தொடர்பில் எழுத்து மூலமாக தனக்கு அறிவிக்கப்படவில்லை என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த வருடத்தோடு ஓய்வு பெறுபவர்களின் இடங்களுக்கு புதிதாக நியமிக்கப்படவேண்டியவர்களின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்படுகின்றது. உள்நாட்டுஅலுவல்கள் அமைச்சினால் அந்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. எங்களது பெயர்களும்அந்த பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறதே தவிர எனக்கு இடமாற்றம் தொடர்பில் எழுத்து மூலமாக அறிவிப்பு எதுவும் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (4-7)

இதேவேளை நேற்று குறித்த வீதியால் இறாலுடன் சென்ற வியாபாரி ஒருவரை வழிமறித்து அவர் கொண்டு சென்ற இறாலை வீதியில் கொட்டுமாறு கூறி அவரது தொழிலுக்கு இடையூறு விளைவித்துள்ளனர். (4-7)

## 30 ஆயி...

வாறு ஓய்வுபெறவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

அரச ஊழியர்களை சமநிலைப்படுத்துவதற்கான பிரதமரின் செயலாளரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (4-7)

## கொழு...

இடம்பெற்ற நிலையில் இம்முறை அனைவரையும் அழைத்து கலந்துரையாடத் தீர்மானித்துள்ளதாக அவர்மேலும் தெரிவித்தார். (4-7)

## மோ...

சம்பவித்ததனால் குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தில் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய பெண் ஒருவரே உயிரிழந்துள்ளதுடன், அவருக்குப் பின்னால் மோட்டார் சைக்கிளில் பயணித்த மகளும் காயமடைந்துள்ள நிலையில் யாழ். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்துச் சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7,104)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1956 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022.12.26 தினம் திங்கட்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,000,060/-
P 24 38 43 48
8350 532

திங்கட்கிழமை
சனிதா
சீட்டிழுப்பு திகதி : 2022.12.26
சீட்டிழுப்பு இல : 4117
வர்ணம் : நீலம்
ரூ. 2,986,980/-
வெற்றி இலக்கங்கள்
05 12 20 70 H

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,819,076.40
திகதி 2022-12-26
வெற்றி வாரம் 3668
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 23 42 49 50 மேஷம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,824,300/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 01 19 22 26 61
சீட்டிழுப்பு வாரம் 1132
திகதி 2022.12.26 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 289,200,245.80
தொலைபேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1882
சீட்டிழுப்பு திகதி 2022-12-26
வெற்றி இலக்கங்கள் 10 36 50 65 U
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 38,263,620/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

திங்கட்கிழமை
அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல : 1782
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2022.12.26
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,314,220/-
வெற்றி இலக்கங்கள் 13 53 57 73 X

நாகபூசணி அருளுடன்
அதிர்ஷ்டம் வெல்லப்பட்டுள்ளது
தேசத்தின் மகுடம் மகஜன சம்பத வழங்கிய 20 இலட்சம் 25.12.2022 அன்று ஒருவர் வென்றுள்ளார். அப்பரிசு சீட்டை விற்பனை செய்துள்ளார் திருநெல்வேலி முகவர் NLB கனகலிங்கம் சிவகரன்
யாழ்.நகரமெங்கும் அமோகமாக விற்பனையாகின்றது மகஜன சம்பத ஜயகிங் 5000 100/=, ஏராளமான பரிசு வாய்ப்புகளுடன். தவிர 30.12.2022 அன்று குலுக்கப்படும் விசேட ரிக்கற்றுக்கள் ராசிசுபலன் NLB, கப்ருக DLB விற்பனையாகின்றது. எனவே நீங்களும் வெற்றியாளராக
அதிகம் வாங்குங்கள்: அதிகம் வெல்லுங்கள்
வாழ்த்துபவர்கள்
யாழ்.முகவர்கள்
கனகலிங்கம் NLB, திலகவதி DLB
இல.94, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(13919)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## எதிர்வரும் ஞாயிறன்று
# ஈழத்துச் சிதம்பர பாத யாத்திரை

திருவெம்பாவையை முன்னிட்டு சைவ மகா சபையின் ஏற்பாட்டில் 10 ஆவது ஆண்டாக ஈழத்துச் சிதம்பர பாத யாத்திரை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

சிவனை நினைந்து அனுட்டிக்கும் மார்கழி திருவெம்பாவை காலத்தில் சைவத் தமிழ் மக்களிடையே ஆன்மீக சிந்தனையையும் அறநெறிப் பண்புகளையும் மேலோங்கச் செய்வதன் மூலம் மனித நேயம் மிக்க சிறந்த சமுதாயத்தை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு 10 வருடங்களாக இப் பாத யாத்திரை நடத்தப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு சம்பில்துறை சம்புநாத ஈச்சரத்தில், 21 அடி உயர சிவபெருமான் திருச்சொரூபத்திற்கு முன்பாக ஆரம்பிக்கும் பாத யாத்திரையானது சாந்தை, பனிப்புலம், பறாளாய், சுழிபுரம் மேற்கு, பெரியபுலோ. சுழிபுரம் சந்தி ஆகிய பாதைகளூடாக நகர்ந்து பொன்னாலை - மூளாய் இராவணேச்சரம் சென்று அங்கிருந்து காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தைச் சென்றடையும்.

பாத யாத்திரையாகச் செல்லும் அடியவர்களுக்கு பொன்னாலைச் சந்தியிலுள்ள நாராயணன் தாகசாந்தி நிலையத்தினர் மதியம் அன்னதானம் வழுங்குவர்.

பாதயாத்திரையில் கலந்து கொள்ள விரும்பும் சிவனடியவர்கள் காலை 7 மணிக்கு மாதகல் சம்புநாத ஈச்சரத்திற்கு வருகை தந்து கலந்துகொள்ளுமாறு சைவ மகா சபை அறிவித்துள்ளது. (4,7,104)

# 11 மாதங்களில் 497 கொலைகள்
## பொலிஸ் அறிக்கைகள் தெரிவிப்பு

இந்த வருடத்தின் முதல் 11 மாதங்களில் 497 கொலைகள் இடம்பெற்றுள்ளதாக் பொலிஸ் அறிக்கைகள் உறுதிப்படுத்துவதாக பேராதனை பல்கலைக் கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

அந்த கொலைகளில் 46 சதவீதமானவை (223 கொலைகள்) கடுமையான தாக்குதலால் நடந்தவை என்றும் அவர் கூறியுள்ளார். (4,7)

# ரூ. 50 - 55 இடையில் முட்டை விற்பனை செய்ய இணக்கம்

(கொழும்பு)

முட்டை ஒன்றின் விலையை 50 முதல் 55 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்வதற்கு கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

சந்தையில் நிலவும் முட்டை தட்டுப்பாடு மற்றும் அதன் விலை தொடர்பில் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் ஏனைய சங்கங்களுடன் கலந்துரையாடி இது தொடர்பில் இறுதி தீர்மானத்தை மேற்கொள்வதாக அந்த சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் இடைத்தரகர் இன்றி 55 ரூபாவுக்கு முட்டையை விற்பனை செய்ய முடியும் எனவும்தெரிவித்துள்ளார்.(4,7)


## வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி
The Inner Circle நிறுவனத்தின் வடக்கு மாகாண கிளைக்கான பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.



**பதவி வெற்றிடங்கள்**
- அலுவலக உதவியாளர்
- மேற்பார்வையாளர்
- Bike Rider
- நிர்வாக உத்தியோகத்தர்
- உதவி முகாமையாளர்
- Tele Caller

O/L & A/L
வயது : 18- 28

**பெற்றுக்கொள்ளும் சலுகைகள்**
- E.P.F & E.T.F
- அடிப்படைச் சம்பளத்துடன் 40,000/= இற்கும் அதிக வருமானம்.
- தெற்காசியாவின் உயர் மட்ட தொலைத் தொடர்பு பிரதிநிதியாக செயற்படும் வாய்ப்பு.

(13922)

076 770 7759

## தவறிவிட்டது

NP-Gk-1927 இலக்க வாகனத்தினுடைய புத்தகம் கடந்த 22 ஆம் திகதி நாவலர் வீதி - ஸ்ரான்லி வீதிக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

021 221 4596
077 413 5493

(13918)

## மடப்பள்ளி வேலை செய்வதற்கு ஆள் தேவை

வல்வெட்டித்துறை நகர மத்தியில் அமைந்துள்ள சிவன் தேவஸ்தானத்திற்கு நித்திய மடப் பள்ளி வேலை செய்வதற்கு அந்தணகுலத்தை சேர்ந்தவர் தேவைப்படுகிறது.
தங்குமிட வசதி உண்டு.
விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே இல.

077 706 7698

(C-5571)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127


## மரண அறிவித்தல்

### திருமதி. இரத்தினம் பாக்கியம்



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காடு விநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இரத்தினம் பாக்கியம் அவர்கள் 25.12.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - குஞ்சுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சிஅம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் அன்புத் துணைவியாரும் காலஞ்சென்றவர்களான பற்குணநாதன், மகேசானந்தன் மற்றும் இராசமலர், யோகமலர், தங்கமலர்(லண்டன்), கருணாமூர்த்தி(கனடா), புஸ்பமலர்(கனடா), யோகலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலசுந்தரி, துரைராசா, செல்வராஜ், சிவஞானசங்கர், சத்தியவதி, லோகேஸ்வரி, நகுலதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும் கோகுலரஞ்சன், பர்மிலா, பவித்திரா, வித்தகன், கமலகரன், ஜெயக்குமார், பாஸ்கரன், வசந்தகுமாரன், கமல்ராஜ், மதனகுமார், ரமணகுமார், வோஜனா, மனோஜ், சுமங்கலி, ஜேந்தி, பிரியா, மனோஜி, கஜேந்திரன், அனுசியா, மேனகா, ஜேந்தன், கேம ஜீவனா, கேமடினோசா, மீறுஜா, நீதுஜா, நிரோசா, நிவேதா, பானுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, செல்லம்மா, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, தம்பிப்பிள்ளை, சின்னத்துரை மற்றும் இந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29.12.2022 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மதியம் 12.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

077 691 3206
077 290 1237

தகவல்:
குடும்பத்தினர்.

(C-5666)


## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும்- 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

(C-5670)

எமது கிளைகள்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A,சப்பல் லேன்
யாழ்ப்பாணம்.
0777-068-777

## சமையல் வேலை

யாழ்ப்பாணத்தில் சமையல் வேலைக்கு தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய ஆட்கள் தேவை.



சம்பளம் 30,000/-
தங்குமிடம்
3 நேரம் சாப்பாடு
வழங்கப்படும்
(பெண்கள் விரும்பத்தக்கது)
40 வயதுக்கு உட்பட்டவர்கள்

CIMS COLLEGE 0767093368

(C-5670)

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

## நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 72 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன.(பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(13920)

## தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

077 986 5457, 077 814 7389


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.